# தாயுமானவர் பாடல்களில் சிவனின் திருஅடையாளத் தத்துவங்கள்

# The Philosophical Significance of Shiva's Sacred Emblems in Thayumanavar's Songs

**முனைவர் ர. ஆர்த்தி**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

கற்பகம் உயர்கல்விக்கழகம், கோவை-21

மின்னஞ்சல்: aarthiravi999@gmail.com

**Dr. R. Aarthi**

Assistant Professor, Department of Tamil, Karpagam Academy of Higher Education, Coimbatore-21 Email: aarthiravi999@gmail.com

**Abstract:**

We delve into philosophy when we attempt, in some way, to contemplate and research worldly matters. A knowledge of philosophy is essential to understand why humans live and what their life's objectives are. This can be observed in Thayumanavar's hymns. While many religious scholars and saints have stated that it is sufficient to live by remembering and praising Lord Shiva, who is the foremost among all and possesses unparalleled divine qualities, the objective of this article is to bring to light how Thayumanavar, in his songs, has subtly or esoterically sung about the philosophical principles revealed by Shiva's sacred emblems.

**Keywords:** Sacred Emblems – Crescent Moon – Ganges – Sacred Ash – Five Sacred Letters

### முன்னுரை

உடல் - செயல் - மனம் - அறிவு - கரு - மாயை - ஆற்றல் என்னும் உணர்வுக் கட்டுக்களைக் கடந்த பின்னரே கடவுள் நிலையை அணுக முடியும். இக்கட்டுக்களைத் தமிழ்ச் சைவம் ஆணவம், கன்மம், மாயை என மும்மலமாகக் கூறும். இவ்வகைக் கட்டுக்களை அறுத்து எறியும் நெறிகளை அறிவுறுத்தும் விதமாக சிவனின் திருஅடையாளங்கள் உள்ளது. இதனை தாயுமனவர் பாடல்களில் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### சிவனின் திருஅடையாளத் தத்துவங்கள்

இறைவனின் அடையாளங்களைப் பயன்படுத்துதன் மூலம் முதலில் தன்னிடமுள்ள தேவையற்ற மன அழுக்குகள் நீக்கும். சிற்றின்ப ஆசைகளை அனுபவிப்பதற்கே பல வகையான செயல்களை மேற்கொள்ளும் போது பேரின்பமாம் இறைவனை அடைய தன்னளவில் முயற்சி செய்ய வேண்டும். இறைவன் தரித்துள்ள திருஅடையாளங்களை மனிதன் மனமுவந்து அணிந்துக் கொள்ளும் பொழுது, மனிதனின் ஐம்புலன்களும் வசப்பட்டு, மனம் ஒன்றி, தீயநெறியில் செல்லாது நன்நெறியில் செல்ல வழிவகுக்கும். அதாவது, தன் உடலில் இறையின் அடையாளங்கள் ஏதேனும் ஒன்று அணியும் பொழுது தீயச்சொற்களைப் பயன்படுத்துதல், புலால் உண்ணும் எண்ணம், கோபம், காம உணர்வு ஆகியவை மெல்ல மெல்லக் குறையும். இதனால் சக மனிதர்களுடன் இணக்கமான வாழ்க்கைச் சூழல் அமையும். சிவ அடையாளங்கள் குறித:து சங்க காலந்தொட்டே பதிவாகியுள்ளன. எம்பொருமானின் அணிகலன்களைத் திருஅடையளாமாகப் பாடும் மரபானது மிகவும் பழமைக்குரியது என்பதை,

**பாகம் உண்ட பைங்கண் பார்ப்பான்**
**மணிமிடற் றண்ணல் (பரி.5:25-26)**

**புறந்தாழ் புரிசடை புலர்த்து வோனே (புறம்:251:7)**

என்ற சங்கப் பாடலடிகள் நிறுவுகின்றன. சிவ சிந்தனையில் ஆழ்ந்துள்ளோர்க்கு சைவ சமயம் சம்பந்தப்பட்ட அனைத்துமே புனிதமாகத் தெரியும். சிவனின் வரலாறு, புராணம், ஆடை, அணிகலன்கள் ஆகியவற்றில் அதீத ஈடுபாடு தொன்றுவது இயல்பாகும். தாயுமானவர் சிவன் மீது தீவிரப் பற்றாளராக வாழ்ந்துள்ளதை,

**சிந்தித்த எல்லாம்என் சிந்தைஅறிந் தேஉதவ**
**வந்த கருணை மழையே பாரபரமே (தாயு:638)**

என்ற பாடல் வெளிப்படுத்துகின்றது.

**பிறை**

பிறை வளர்ந்து தேயும் தன்மை உடையது. சிவனின் திருமுடியில் இருக்கும் பிறை தம் வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வளர் பிறையாகவும், தேய் பிறையாகவும் வரும் என்கின்ற தத்துவத்தை உணர்த்துகிறது. இதனை,

**முற் பதினைஞ்சின் முளைத்துப் பொருந்திடும்**
**பிள்ளைமதிச் செஞ்ஜடையான் (தாயு:504:2)**
**பிறைஅணிந்த**
**மிக்கயி லாயமலை வித்தகனே (தாயு:506:2-3)**

என்ற இப்பாடலடிகள் தெளிவாக்குகின்றன. மனிதன் தன் வாழ்வில் ஏற்படும் இன்பத்தையும் துன்பத்தையும் சரிசமமாகப் பார்க்கும் மனப்பக்குவத்தை அடைய வலியுறுத்தும் வகையில் சிவன் தனது தலையில் பிறையை அணிந்துள்ளார் என்பதை அறிந்துக்கொள்ளமுடிகிறது.

**கங்கை**

கங்கை உலகை அழிக்க வந்த போது அதன் வேகத்தைக் குறைத்து, அடக்கி, தன் தலையில் தாங்கி பகீரதனின் வேண்டுகோளுக்கு இணங்க உலகைக் காத்து நிற்கின்ற தத்துவத்தை,

**புங்கவெண்கோட்டு ஆனைபதம் புந்திவைப்பது எந்நாளோ (தாயு.1091)**
**மதியும் கங்கையும் கொன்றையும் மத்தமும்**
**பொதியும் சென்னிப் புனித (தாயு:264:1-2)**

என்ற பாடலடிகள் விளக்கியமைகின்றன. அதாவது, மனிதன் தனது சிற்றின்ப ஆசைகள் கங்கைப் போன்று பொங்கி கரை கடந்து செல்லாமல் அதனை அடக்கி மனத்தை பக்குவ நிலைக்கு அழைத்து வர வேண்டும் என்பதைத் தாயுமானவர் வலியுறுத்துகிறார்.

கொன்றை மாலை அணிந்தவன்

ஆண்டுக்கு ஒருமுறை மலரக்கூடிய கொன்றை மலரானது, மஞ்சள் நிறமுடையது. ஓங்கார வடிவமுடைய கொன்றை மலரானது சரக்கொன்றை, சிறுகொன்றை, செங்கொன்றை, மயில்கொன்றை, புலிநககொன்றை எனப் பலவகைகளில் காணப்படுகின்றது. மருத்துவக் குணத்திலும் கொன்றை மலர் ஈடு இணையற்றது. சரக்கொன்றை சிறந்த நோய்

கொல்லியாகிறது. இப்பூவுலகில் மனிதர்களுக்குத் தோன்றுகின்ற நோய்களிலிருந்து காக்க இறைவன் இப்பூவைத் தன் தலையில் வைத்து காக்கின்றான் என்றத் தத்துவத்தினை,

**துளிஆட மன்றுள் நடம்ஆடும் முக்கண் சுடர்க்கொழுந்தே! (தாயு:406:4)**

**கள்அவிழும் பூங்கொன்றைக் கண்ணியான் - உள்ளபடி (தாயு:504:2)**

இப்பாடலடிகள் உணர்த்துகின்றன.

**உமையொரு பாகன் தத்துவம்**

உமையொரு பாகன் என்பது சிவனும் பார்வதியும் ஒரே உருவாய் சேர்ந்து அருள் பாலிக்கும் தோற்றமாகும். சிவன் இல்லையேல் சக்தி இல்லை. சக்தி இல்லையேல் சிவனில்லை என்ற விளக்கத்தை அளிக்கும் கூறாக மாதொருபாகன் அமைந்திருப்பதாகும். ஆன்மீகம் தொடர்பாக மட்டுமின்றி, வாழ்வியல் தொடர்பாகவும் ஆணின்றி பெண்ணும், பெண்ணின்றி ஆணும் வாழும் வாழ்க்கை சாத்தியமற்றது என்பதை விளக்கும் விதமாக அமைந்த இத்தத்துவம்,

**தையல் ஓர்புறம் வாழ்ஜக நாதனே! (தாயு:252:4)**

**இடம்ஒரு மடவாள் உலகுஅன்னைக்கு ஈந்திட்டு (தாயு:273:1)**

**பெண்ஆண் அலிஎனவும் பேசாமல் என்அறிவின்**
**கண்ணூடே நின்றஒன்றைக் காணுநாள் எந்நாளோ (தாயு:1212:2)**

இப்பாடலடிகள் மூலம் வெளிப்படுகின்றது. இவ்வுருவத்தினை, உமையொருபாகன், மங்கையொருபாகன், மாதொருபாகன், அம்மையப்பர், அர்த்தநாரீஸ்வரர் என்கின்ற திருப்பெயர்களிலும் மக்கள் அழைக்கின்றனர்.

**பாம்பு - புலித்தோல்**

சிவனின் கழுத்தைச் சுற்றியுள்ள பாம்பு, நம்மை ஒவ்வொரு நிமிடமும் பாவப்படுகுழியில் தள்ளச் சந்தர்ப்பம் பார்த்தபடி நச்சுப்பாம்பாக நம்மைச் சுற்றி வளைத்துக் கொள்ள காத்திருக்கிறது என்பதை உணர்ந்து ஐந்து புலன்களை அடக்கி நிறுத்துவதைக் குறிப்பது பாம்பு அணியும் தத்துவமாகும். சிவபெருமாள் ஆடையாக அணிந்திருக்கும் புலித்தோல் மனிதன் மனம் மிருக உணர்ச்சிக்கு இணங்கக் கூடாது என்ற தத்துவத்தினை விளக்குகின்றது.

**திங்கள் பாதி திகழப் பணிஅணி**
**கங்கை வார்சடைக் கண்நுதல் எந்தையே! (தாயு:225:3-4)**

**புலியின் அதள்உடையான் ( தாயு:483:1)**

**முக்கண் தத்துவம்**

நமது இரண்டு கண்களுக்கும், மூக்கின் மேல் சுழி முனைக்கும் புருவங்களின் இடைநடுவே, சிறு ஊசித் துவராத்தில் பத்தில் ஒரு பாக அளவில் மிக நுட்பமாக இருக்கும் துவராத்திற்கு நெற்றிக்கண் என்று பெயர். இதனை மிக இலேசான சவ்வு மூடிக் கொண்டிருக்கிறது. குண்டலினி சக்தியை மேலே எழுப்பித் தலையின் நடு உச்சிப் பகுதிக்கு கொண்டு வரும் போது அளப்பரிய ஞானம் தோன்றும் என்பதை,

**துளங்குநல் நுதல்கண் தோன்ற (தாயு:168:2)**

**நம்மை கூர்முக்கண் நாதன் இருக்கவே (தாயு:242:4)**

**முக்கண் ஆனந்த மூர்த்தியே! (தாயு:250:4)**

என்ற பாடலடிகள் வழி அறிய முடிகின்றது.

**சடைமுடி தத்துவம்**

சடாமுடித் தத்துவமானது பற்றற்ற தவ நிலையையும், தியானத்தின் முதிர்ச்சியையும் குறிக்கிறது. எம்பொருமானின் சடாமுடி ஞானத்தை அள்ளித் தருவது. இத்திருசடை ஒன்றுபட்டு குவிந்திருக்கும் நிலையில் குவிந்த ஞானத்தையும், விரிந்து பரந்து கிடக்கும் தருணத்தில் உயிரினங்களுக்குப் பரந்த ஞானம் கிட்டும் நிலையினையும் உணர்த்துவதாக,

**புரிசடை யோனே (திரு.575:4)**

**செஞ்ஜடையான் (தாயு:504:1)**

இப்பாடலடிகளில் தாயுமானவர் எடுத்துரைக்கின்றன.

**திருநீலகண்ட தத்துவம்**

உலகில் ஏற்படும் தீமைகளைத் தம்முள் தாங்கி, தன்னை நம்பி வந்தவர்களைக் காக்கும் தத்துவ ரூபமாக இறைவன் நிற்கிறார் என்பதனை,

**ஆலம் உண்டும் அமிர்துஉரு வாய்வந்த**
**காலம் எந்தை கதிநிலை காண்பதே (தாயு:197:3-4)**

என்ற பாடலடிகள் பதிவுசெய்கின்றன.

**திருநீறு**

சிவ பெருமானின் அருட்சின்னமாகக் கருத்தப்படுவது திருநீறு ஆகும். திருநீற்றினை நெற்றியில் அணியும் பொருட்டு இறைவன் நெற்றியை உரோமம் இல்லாமல் படைத்திருப்பதாக சாத்திரங்கள் கூறுகின்றன. சைவர்கள் அணியும் திருநீறானது மூன்று கொடுகளால் ஆனது இத்தகு கோட்டிற்கு இடைஇடையே இடைவெளி இருக்க வேண்டும் என்பது அருளாளர்களின் வாக்காகும். பசுமாட்டுச் சாணத்திலிருந்து ஆக்கப்பட்ட திருநீறு கருப்பு நிறமுடையது அதை புட்டு இட்டு சுட்டபின் வெண்மையாகிறது. ஆன்மாக்களும் தன்னிடமுள்ள ஆணவம் அகற்றும்பொழுது தூய ஆத்மாவாக மாறலாம் என்பதே திருநீறு உணர்த்தும் இத்தத்துவமாகும். வினைப்பயனை மாற்றுவதற்கு எம்பெருமானின் திருநீறே போதுமென்பதை,

**விளங்கவெண் ணீறு பூசி (தாயு:168:1)**

என்றும் தாயுமானரும்,

**கங்காளன் பூசும கவசத் திருநீற்றை**
**மங்காமல் பூசி மகிழ்வீரே ஆமாகில்**
**தங்கா வினைகளும் சாரும் சிவகதி**
**சிங்கார மான திருவடி சேர்வீரே (திரு.1666)**

என்ற பாடல் வழி கூறிச் சிறப்பிக்கின்றார். சிவபெருமான் மேனி முழுவதும் அணியும் திருநீற்றை நாமும் அணிவதால் இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை கிடைக்கும் என்பது நம்பிக்கையாகும்.

**ஐந்தெழுத்துத் தத்துவம்**

திருவைந்தெழுத்தை வேதங்களின் சாரம் என்று சமயச் சான்றோர்கள் கூறுகின்றனர். உடலுக்கும் உயிருக்கும் ஆழ்ந்த தூய்மையையும், வற்றாத இன்பத்தையும் கொடுத்தருளும்,

சைவசமயத்திற்கே உரித்தான பதி, பசு, பாசம் என்னும் தத்துவமும் இதனுள் அடங்கும். நமசிவாய என்பதில் நம பசுவையும், சி பதியையும், வய பாசத்தையும் குறிக்கும். அதாவது, பசுவாகிய ஆன்மாக்கள் பாசமாகிய சுகங்களைத் தொலைத்துப் பதியாகிய பரம்பொருளுடன் இணைதல் வேண்டும் என்ற பராமானந்தத் தத்துவத்தைக் குறிக்கிறது. இதனை,

**ஓங்காரமாம் ஐந்து எழுத்தால் புவனத்தை உண்டுபண்ணி (தாயு:409:3)**

என்றும்

**நாமஎன்னும் நாமத்தை நாவில் ஓடுக்கிச்**
**சிவஎன்னும் நாமத்தைச் சிந்தையுள் ஏற்றப்**
**பவம்அது தீரும் பரிசும்அது அற்றால்**
**அவமதி தீரும் அறும் பிறப்பன்றோ (திரு.2717)**

இப்பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

**இடப வாகனம்**

தர்ம தேவதையவள் தான் அழியாது என்றும் நித்தியமாக சிவனுடன் இருக்க விரும்பி இடப வாகன உருவம் கொண்டு சிவனிடத்தில் வேண்ட, எம்பெருமானும் அவள் வேண்டுதலை ஏற்று இடப வாகனத்தை ஏற்றார். தருமத்திற்கு என்றும் அழிவில்லை என்பதை உலகிற்கு உணர்த்த தருமத்தையே வாகனமாகக் கொண்டவன் என்பதை,

**அடல்விடை ஏறும் அமரர்கள் நாதன் (திரு.299:3)**

**விடைஏறும் எம்பிரான் (தாயு:584:13)**

இப்பாடல்களில் தத்துவம் பகர்ப்படுகிறது.

**தத்துவமும் திருஅடையாளங்களும்**

| திருஅடையாளங்கள் | தத்துவம் |
|---|---|
| பிறை | வாழ்க்கைத் தத்துவம் (இன்ப -துன்பம் கலந்த தான் வாழ்க்கை) |
| கங்கை | சிற்றின்பத்தை அடக்கி வாழ்தல் |
| கொன்றை மாலை | மனிதர்கள் நோயின்றி வாழ வழி காட்டியும், காத்தும் நிற்பது. |
| உமையொரு பாகன் | ஆணும் பெண்ணும் சமம் என்ற தத்துவம் |
| பாம்பு -புலித்தோல் | ஐம்புலன்களை அடக்குதல் |
| முக்கண் | ஞானம் பெறும் வழி. |
| சடாமுடி | பற்றற்ற தவநிலையை அடைதல். |
| திருநீறு | இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை கிடைக்கும் |
| ஐந்தெழுத்து | இறைவனை உணரும் வழியாகும். |
| இடபவாகனம் | தருமத்தை நிலை நாட்டுதல். |

**முடிவுரை**

- தத்துவம் என்பது வாழ்வியல் அறங்களையும், மனித நெறிகளை நெறிப்படுத்தும் விதத்தையும் எடுத்துரைப்பதாகும். இவற்றை தாயுமானவர் பாடல்களில் அதிகமாகக் காணமுடிகிறது.
- சைவ சமயத் தலைவனான சிவபெருமானின் திருஅடையாளங்களை உள்ளத்தாலும், உடலாலும் ஏற்றுக் கொள்வதன் விளைவாக மனம் ஒருமுகப்பட்டு, இறைச் சிந்தனையில் ஆழந்து அதன் மூலம் தீய எண்ணங்கள் தொடராமல் இருக்கும் என்பதை தாயுமானவர் பாடல்களில் வழி அறிந்துக் கொள்ளமுடிகிறது.
- இத்தத்துவங்கள் மனக்கட்டுப்பட்டை உருவாக்கி சிற்றின்பத்தை விட்டு பேரின்பத்தை அடைய வழிச்செய்யும் என்பதையும் அறிந்துக் கொள்முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. தாயுமான சுவாமி பாடல்கள், புலவர்.வீசிவஞானம் (உரை), விஜயா பதிப்பகம், முதற்பதிப்பு - 2010.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.
Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.